## 2.13 2005–06 – ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ.1 கோடி ஒதுக்கீடு

ஊரக வளர்ச்சி (மதி 1) துறை

அரசாணை (நிலை) எண்.30 நாள் : 10.03.2005

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.249, நிதித் துறை நாள் 12.5.1997
2. அரசாணை (நிலை) எண்.220, ஊரக வளர்ச்சித் (மதி1) துறை நாள் 5.9.2001
3. அரசாணை (நிலை) எண்.75, ஊரக வளர்ச்சித் (மதி1) துறை நாள் 19.6.2002
4. அரசாணை (நிலை) எண்.65, நிதித் துறை நாள் 25.2.2004

**ஆணை**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், 1997–98 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது, அவ்வாண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுற்கென தொகுதி ஒன்றிற்கு ரூ. 25 இலட்சம் வீதம் நிதி வழங்கப்பட்டது பின்னர் இத்தொகை படிப்படியாக அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்தது. 2004 – 2005 ஆம் நிதியாண்டில் ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ.82 இலட்சம் வீதம் இதற்கென வழங்கப்பட்டது.

2. தற்போது 2005–2006 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தொகுதி மேம்பாட்டிற்கென ஒவ்வொரு தொகுதிக்கும் ஒதுக்கப்படும் நிதி 2005–2006 ஆம் ஆண்டிலிருந்து ரூ.1 கோடியாக அதிகரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது,

3. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்கும், தொகுதி மேம்பாட்டிற்கென ஒதுக்கப்படும் நிதியினை 2005–2006ஆம் நிதியாண்டு முதல் தொகுதி ஒன்றிற்கு ரூ. 1 கோடி (ரூபாய் ஒரு கோடி மட்டும்) என அதிகரித்து ஆணையிடுகிறது. மேலும், இத்திட்டத்திற்கு 2005–2006ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் ரூ. 235 கோடி (ரூபாய் இருநூற்று முப்பத்தைந்து கோடி மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையை விடுவிப்பதற்கான ஆணைகள் தனியே வெளியிடப்படும்.

4. இத்திட்டத்தின் கீழ், நிதியினை பகிர்ந்தளிப்பதற்கும், பயன்படுத்துவதற்கும் கீழே கொடுக்கப்பட்டுள்ள திருத்திய முறை 2005–2006 ஆம் ஆண்டு முதல் பின்பற்றப்பட வேண்டுமென்று அரசு ஆணையிடுகிறது.

| | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|
| குடிநீர் வழங்கல் பணிகள் | 10.00 |
| நமது கிராமம் திட்டம் | 15.00 |
| மாணவர் இல்லங்கள் கட்டுதல் | 10.00 |
| கிராம ஊராட்சிகளில் சிமெண்ட் சாலைகள் | 10.00 |
| தெரு விளக்குகள் | 5.00 |
| இதரப் பணிகளுக்கான மொத்த ஒதுக்கீடு | 50.00 |
| மொத்தம் | 100.00 |

5. இவ்வாணை நிதித் துறையின் இசைவுடன் (அ.சா.கு. எண்,16614/ஊ.வ/2005, நாள் 10.3.2005) வெளியிடப்படுகிறது,

(ஆளுநரின் ஆணைப்படி)

**சாந்தா ஷீலா நாயர்**
அரசு செயலாளர்